செய்தி வெளியீடு எண்: 955 நாள்:11.12.2020

## செய்தி வெளியீடு

**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், சென்னை – 600 106**
**பி.எஸ்.எம்.எஸ். / பி.ஏ.எம்.எஸ். / பி.எச்.எம்.எஸ். மருத்துவ பட்டப்படிப்புகள்**
**[சுயநிதி கல்லூரிகளில் உள்ள நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கு]**

**2020 – 2021 கல்வியாண்டு**

தமிழ்நாடு சுயநிதி இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதி ( சிறுபான்மையினர் / சிறுபான்மையினரற்ற ) மருத்துவக் கல்லூரிகளில் 2020–21 ஆம் ஆண்டிற்கு பி.எஸ்.எம்.எஸ். / பி.ஏ.எம்.எஸ். / பி.எச்.எம்.எஸ். மருத்துவ பட்டப்படிப்புகளுக்கு நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் தமிழ்நாடு மேனிலைப் பள்ளி தேர்வு அல்லது அதற்கு இணையான கல்வி வாரியத் தேர்வில் ( அறிவியல் மற்றும் ஆங்கிலத்தை பாடங்களாக கொண்டு ) தேர்ச்சி பெற்று, 2020 ஆண்டு நடைபெற்ற மருத்துவ படிப்பு சேர்கைக்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் **( NEET U.G.-2020 )** கலந்துகொண்டு தகுதிக்கு தேவையான சதமான மதிப்பெண்களை பெற்றவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன **(மேலும் தகுதிப் பற்றிய விவரங்களுக்கு வலைதள அறிவிக்கையை பார்க்கவும் ).** விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை 13–12–2020 முதல் 30–12–2020 பிற்பகல் 05.00 மணி வரை மட்டும் எங்களது அலுவலக வலைதளமான **"www. tnhealth.tn.gov.in"** யிலிருந்து பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம். மேலும் விவரமான வலைதள அறிவிக்கை, மேற்கண்ட படிப்புகளுக்கான சுயநிதி சிறுபான்மையினர் / சிறுபான்மையினரற்ற இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளின் விவரம், தகவல் தொகுப்பேடு, பொது விண்ணப்ப பதிவிறக்கம் மற்றும் அதனின் கட்டணம், குறைந்தபட்ச தகுதி சதமான மதிப்பெண்கள், படிப்புகளின் விவரம், அடிப்படைதகுதி, கல்விக்கட்டணம் மற்றும் இதர விவரங்களுக்கு "www.tnhealth.tn.gov.in " என்ற வலைதளத்தை தொடர்பு கொள்ளலாம்.

**விண்ணப்ப படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை பதிவிறக்கம் செய்ய : நாள் 13–12–2020 முதல் 30–12–2020 பிற்பகல் 05.00 மணி வரை.**
**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் பெற கடைசி நாள்: 31 –12–2020 மாலை 5.30 மணி வரை.**

இயக்குநர்
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**